மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை
கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு,
பருத்தி புடைவைக் கடல்
சீமாட்டி
புடவை அகம்
122, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு

Registred as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கல்யாண முகூர்த்தப்
புடைவைகளின்
கைராசியான ஸ்தாபனம்
சீமாட்டி
புடவை அகம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 19 வியாழக்கிழமை (02 06 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 186

# அத்தியாவசிய, புனர்வாழ்வுப் பணிகள்
# வடக்கு-கிழக்கில் தடைப்படும் அபாய நிலை!

## உயர் அதிகாரிகளின் கூட்டம் 2 மாதங்களாக நடக்கவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 2

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அத்தியாவசிய சேவைகளும் புனர்வாழ்வுப் பணிகளும் விரைவில் தடைபட்டுப் போகும் அபாய நிலை ஒன்று உருவாகி உள்ளது.

உயர்நிலை அதிகாரிகளைக் கொண்ட தேசிய புனர்வாழ்வு உதவிக் குழுவின் கூட்டம் கடந்த இரண்டு மாதங்களாக நடைபெறவில்லை; அதனால் எதிர்வரும் மாதங்களுக்குரிய நிவாரணம் மற்றும் அத்தியாவசிய சேவைப் பணிகளும்; புனர்வாழ்வுப் பணிகளும் தடைப்படும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ள வேண்டிய புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைத் திட்டங்கள் குறித்து ஆராய்ந்து முடிவு செய்யும் வகையில் தேசிய புனர்வாழ்வு உதவிக் குழுவின் கூட்டம் மாதாந்தம் கொழும்பில் நடைபெற்று வந்தது.

ஆனால் கடந்த இரண்டு மாதங்களாக பிரஸ்தாப குழுவின் கூட்டம் நடைபெறவில்லை.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள அகதிகள் பிரச்சினை, ஆசிரியர் மற்றும் எழுதுவினைஞர் உட்பட அரச நியமனங்கள், உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள், அனுட்புதல், நிவாரண, புனர்வாழ்வுக் கடன் வழங்குதல் போன்ற வேலைத் திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக—

மாவட்ட அரச அதிபர்கள், படை அதிகாரிகள், கொழும்புத் திணைக்களத் தலைவர்கள், புனர்வாழ்வு அதிகாரிகள் மாதாந்தம் கூடி பல முடிவுகளை மேற்கொள்வது வழமை.

அந்த முடிவுகளின் அடிப்படையிலேயே வடக்கு - கிழக்கில் சம்பந்தப்பட்ட பணிகள் நடைமுறைப்படுத்தப்படுவதும் குறிப்பிடத்தக்கது;

தேசிய புனர்வாழ்வு உதவிக் குழுவின் தலைவராக இருந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. கவின் செயற்குழுவில் காமினி!

ஐ.தே. கவின் தேசியப்பட்டியல் எம்.பியாக நியமிக்கப்பட்ட காமினி திஸநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினராகவும் ஜனாதிபதி விஜேதுங்காவினால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கட்சி வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

குண்டு வீச்சை கண்டித்து

## நகரில் அடுத்த வாரம் கண்டனப் பேரணி

யாழ்ப்பாணம், ஜூன் 2

நீர்வேலிப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் ப. நோ. கூ. சங்கம் ஒன்றின் தலைவர் கொல்லப்பட்டதை கண்டித்து எதிர்வரும் புதன்கிழமை யாழ் நகரில் கண்டனப் பேரணி ஒன்றை நடத்துவதென கூட்டுறவாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

யாழ். பணிக்கூண்டு வீதியில் உள்ள யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை அலுவலகத்தில் இருந்து அன்றைய தினம் காலை 9-30 மணிக்கு பேரணி ஆரம்பமாகி யாழ். செயலகத்தை அடையும். அங்கு வைத்து ஜனாதிபதிக்கு விலாசமிடப்பட்ட கண்டன மகஜர் யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்பட உள்ளது.

இக்கண்டனப் பேரணிக்கு கூட்டுறவாளர்கள், பொதுமக்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை கோரியுள்ளது. (ஒ 162)

## மண்ணெண்ணெயுடன் மாஹோ அடுத்த வாரம் வருகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். மாவட்டத்துக்கான ஜூன் மாதத்துக்குரிய ஒதுக்கீடான—7 ஆயிரம் பரல் மண்ணெண்ணெய்யுடன் மாஹோ கப்பல் அடுத்த வாரம் முற்பகுதியில் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என யாழ். செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கப்பலில் மண்ணெண்ணெய் ஏற்றும் வேலைகள் கொழும்புத் துறைமுகத்தில் கடந்த 30 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

மடு, மன்னார் பகுதிகளுக்கு

## மாங்குளம் பாதையூடாக உணவுப் பொருள்கள்

### அடுத்த வாரம் முதல் அனுப்ப ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 2

மன்னார் — வவுனியா வீதிவழிப் போக்குவரத்துக்கு படையினர் தடை செய்துள்ளதால் மன்னார் பெருநிலப் பரப்பு மற்றும் மடுப்பகுதிக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் மாங்குளம் பாதையூடாக அடுத்த வாரம் முதல் எடுத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மடுவில் உள்ள அகதிகளுக்கான பொருள்களும்—

மன்னார் பெருநிலப்பரப்பில் உள்ள மக்களுக்கான பொருள்களும்—

வவுனியாவில் இருந்து நொச்சிமோட்டை வழியாக வைத்தகுளம் ஊடாக மாங்குளம் அடைந்து அங்கிருந்து மடுவுக்கு எடுத்துச் செல்லப்படவிருக்கின்றன.

மடுவில் உள்ள அகதிகளின் சுகாதார சீர்கேட்டை நீக்குவதற்கான தொற்றுநீக்கிகள் கொண்ட பொருள்கள் முதலில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தால் இப்பாதையூடாக எடுத்துச் செல்லப்படவிருப்பதாகவும்—

அதைத் தொடர்ந்து மன்னார் அரச அதிபரின் ஏற்பாட்டிலான உணவு வாகன அணி செல்லவுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## பொலிஸ் அதிகாரிகள் 261 பேர் பதவி உயர்வு

கொழும்பு, ஜூன் 2

261 பொலிஸ் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கப்படவுள்ளது.

இவர்களில் பதினொரு பேர் பிரதிப் பொலிஸ் மா அதிபர்களாகப் பதவி உயர்வு பெற்றனர்.

45 பேர் பொலிஸ் அதிபர்களாகவும் 89 பேர் உதவிப் பொலிஸ் அதிபர்களாகவும் 116 பேர் பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர்களாகவும் நேற்று முதல் பதவி உயர்த்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-6)

## இரு நேரப் பாடசாலை நாளை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 2

தற்போது நடைமுறையில் உள்ள பாடசாலை நேரம் குறித்து ஒரு கருத்து விளக்கமும் கலந்துரையாடலும் நாளை மாலை 4 மணிக்கு நல்லூரில் கல்வித் திணைக்கள வளவில் அமைந்துள்ள சாதனா பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை யாழ் தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் மேற்கொண்டுள்ளார் என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடல் தொடர்பான அழைப்புக் கடிதங்கள் நல்லூர். யாழ்ப்பாணம். வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய நான்கு கோட்டங்களையும் சேர்ந்த—

1 ஏ பி வகைப் பாடசாலைகளின்— அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் —

அப்பாடசாலை அதிபர்கள் தம்முடன் ஐந்து ஆசிரியர்கள், ஐந்து மாணவ முதல்வர்கள், மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம்—பாடசாலை அபிவிருத்திச் சபை ஆகியவற்றைச் சேர்ந்த ஐந்து பிரதிநிதிகள் ஆகியோரை அழைத்து வரும்படி கேட்கப்பட்டுள்ளனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் கல்வித் திணைக்கள அலுவலர்களுடன் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ள

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் வருகை நேற்றுக் குறைவு

யாழ்ப்பாணம், ஜூன் 2

ஒருநேரப் பாடசாலை ஆக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தும் மாணவர்களின் போராட்டம் நேற்று பரவலாக இடம்பெற்றது. இதனால் சில பாடசாலைகளில் மாணவர் வரவு குறைந்திருந்தது.

நேற்று முன்தினம் முதல் யாழ் இந்து, இந்து மகளிர் கல்லூரி மாணவர்கள் சமது வகுப்புக்களை பகிஷ்கரித்து வந்தனர்.

நேற்று யாழ். நகரில் உள்ள பல பாடசாலைகளிலும் —

மானிப்பாய், மருதனார் மடம், உரும்பிராய், சுந்நாகம்?ரோடை பகுதிகளில் உள்ள சில பாடசாலைகளிலும் பகிஷ்கரிப்பு இடம்பெற்றது.

சில பாடசாலைகளில் நேற்று மாணவர்கள் காலையில் வகுப்புகளுக்கு வந்திருந்தனர். பிற்பகலில் வரவில்லை

இதற்கிடையில் —

இருநேரப் பாடசாலை விவகாரம் தொடர்பாக தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையால் நேற்று பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பாக —

யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களின் சார்பில் பதில் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக தெரியவந்தது

(உ-168-3-89)

## கப்பலில் செல்லும் நோயாளர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 2

கொழும்பில் சிகிச்சை பெறுவதற்காக கப்பலில் செல்ல தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும், உதவியாளர்களையும் இன்று நண்பகல் 12 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரியில் சமூகமளிக்குமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு, குடிதண்ணீருடன் வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-15-17)

## 18 ஆம் திகதி 'நரோமா' சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 2

திருகோணமலையில் இருந்து எதிர்வரும் 21 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வந்து சேரவிருந்த "நரோமா" கப்பல் முன் கூட்டியே 18 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்று புனர்வாழ்வு அமைச்சு யாழ். செயலகத்துக்கு நேற்று அறிவித்துள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி இக்கப்பலில் பயணம் செய்ய பெயர் பதிவு செய்தவர்கள், 18 ஆம் திகதியே பயணம் செய்ய முடியும் என்று மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் அறிவித்துள்ளார். (உ-3)

## தேசியப் பட்டியல் எம்.பி சிறிசேன பதவி விலக தயார்

கொழும்பு, ஜூன் 2

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் எம். பியான திரு. ஆர். ஏ. டி சிறிசேன பதவி விலகுவதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர் நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி விஜேதுங்காவை அவரது செயலகத்தில் சந்தித்து, தமது பதவி விலகல் முடிவைத் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

தேசியப் பட்டியல் எம். பியாக இருந்த முன்னாள் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா குண்டு வெடிப்புத் தாக்குதலில் கொல்லப்பட்டதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு திரு. சிறிசேன நியமிக்கப்பட்டிருந்தார். (ஒ-எ-6)

## வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் தாக்குதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 2

வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் படையினரின் தாக்குதல்கள் தொடருகின்றன.

நேற்று அதிகாலை 5 மணியளவில் வடமராட்சியை அண்டிய கடற் பகுதிகளில் கடற்படையினரின் பீரங்கிப் படகு தாக்குதலை மேற்கொண்டது. இதனால் மீனவர்களின் படகுகள் சேதமடைந்துள்ளன.

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து தென்மராட்சி பகுதியை நோக்கி பரவலாக ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன

ஹெலி ஒன்று பலாலியில் இருந்து ஆனையிறவு முகாமுக்குச் சென்ற பின்னரே — குறிப்பாக இரவு வேளைகளில் — அங்கிருந்து ஷெல் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றனவாம். (உ-5-15)

## தெற்கில் மாணவர்கள் தொடர் சத்தியாக்கிரகம்

கொழும்பு, ஜூன் 2

கம்பஹா விக்கிரமராச்சி ஆயுர்வேதக் கல்லூரியை களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைத்து பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்படும் என்று 1993இல் அரசு அளித்த உறுதிமொழி நிறைவேற்றப்படாததைக் கண்டித்து அக்கல்லூரி மாணவர்கள் நேற்று தொடர் சத்தியாக்கிரகம் ஒன்றை ஆரம்பித்தனர்.

ஐ.தே.கவின் கம்பஹா மாவட்ட எம். பியான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயும் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டார்.

சத்தியாக்கிரகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதன் அமைப்பாளர்கள் ஒலிபெருக்கி மூலம் சத்தியாக்கிரகத்தின் நோக்கம் பற்றி விளக்கிக் கொண்டிருந்தபோது வீரங்குல பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி என்று கூறிக்கொண்டு சிவில் உடையில் ஒரு நபர் அங்கு சென்று, அனுமதியின்றி கூட்டம் நடத்த முடியாது என்று கூறினார்.

பெர்னாண்டோபுள்ளே அக்கட்டத்தில் தலையிட்டு அந்த நபரிடம் பொலீஸுக்கான அடையாள அட்டை இருக்கிறதா எனக் கேட்டார். அந்த நபர் தம்மிடம் அடையாள அட்டை இல்லை என்று கூறியதுடன் அந்த இடத்தை விட்டு அகன்று சென்று விட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ-6)

## பாதாள உலக குழுக்கள் பற்றி பொலீஸாருக்குத் தகவல்கள்

கொழும்பு, ஜூன் 2

பாதாள உலகக் கோஷ்டிக் குழுக்களினால் கொல்லப்பட்டவர்கள் கடத்தப்பட்டவர்கள், பயமுறுத்தல்கள் மற்றும் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டவர்களும் அவர்களின் உறவினர்களுமாக நூறுக்கு அதிகமானவர்கள், இச்சம்பவங்கள் பற்றி பொலீஸாருக்கு எழுத்து மூலமாகத் தகவல்கள் கொடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் தலைமையகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் இத்தகவலை லங்காதீப பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

அரச இலச்சினை பொறிக்கப்பட்ட வாகனங்களில் சென்று இக்குழுக்கள் புரிந்ததாகச் சொல்லப்படும் சம்பவங்கள் பற்றி தெரிந்து கொள்வதற்கு கொழும்பு குற்றப்புலனாய்வுப் பொலீஸாருக்கு பாதிக்கப்பட்டவர்கள் அளித்த தகவல்கள் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ-6)

மூன்று நீதியரசர்களினால் தள்ளுபடி செய்யப்பட்ட

## அமைச்சரவை மீதான மனு ஐந்து நீதியரசர்கள் முன்!

### உதவி லஞ்ச ஆணையாளர் தரப்பில் மீண்டும் விண்ணப்பம்

கொழும்பு, ஜூன் 2

மூன்று உயர் நீதிமன்ற நீதியரசர்களினால் தள்ளுபடி செய்யப்பட்ட உதவி லஞ்ச ஆணையாளர் விஜய ஹெட்டியாராச்சியினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு ஐந்து உயர் நீதிமன்ற நீதியரசர்களினால் விசாரிக்கப்படவேண்டும் என்று விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உதவி லஞ்ச ஆணையாளரின் சார்பில் பிரபல ஜனாதிபதி சட்டத்தரணியும் சட்டக் கல்லூரியின் முன்னாள் அதிபருமான கே. டபிள்யு குணசேகரா இந்த விண்ணப்பத்தை, மனுவை முதலில் விசாரித்து தள்ளுபடி செய்த மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் சமர்ப்பித்துள்ளார்.

ஒரு கோடி ரூபா நட்டஈடு கோரித் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை, மூன்று நீதியரசர்கள் குழு முறையாக விசாரிக்கவில்லை என்றும்—

மனுவில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் கூறப்பட்டிருப்பதாகவும்—

புதிய விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில அமைச்சர்கள், உயர் அரச அதிகாரிகள் ஆகியோருக்கு எதிரான லஞ்சக் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க நடவடிக்கை எடுத்த காரணத்தினால், அரசாங்கம் தமக்கு பிரதி ஆணையாளர் பதவி உயர்வு அளிக்காது, வெளியார் ஒருவரை அப்பதவிக்கு நியமித்தது தமது உரிமையை மீறும் செயல்

(6ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



இன்டக் இன்டத்தான் ...

விசாரிக்க புதிய ஆணைக்குழு நியமித்தால்

## பிரேமதாஸா கொலை குறித்து புதிய தகவல்கள் வெளிவரும்

### அவரது குடும்பத்தவர்கள் கூறுகின்றனர்

கொழும்பு, ஜூன் 2

பிரேமதாஸா கொலை பற்றி புதிதாக விசாரணை நடத்த விசேட ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படின், இக்கொலை பற்றி பல புதிய சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்படும் வாய்ப்பிருப்பதாக, பிரேமதாஸாவின் குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

"இக்கொலை விசாரணை பற்றி நாம் அமைதியாக ஒரு வருடகாலத்தைக் கழித்தோம் என்று இவர் கூறுவது தவறு.

இவ்விசாரணை குறித்து நாம் கடந்த ஒரு வருட காலமாக அரசில் உள்ள பொறுப்பு வாய்ந்தவர்களின் கவனத்தை ஈர்த்தெடுப்பதற்கு எடுத்த அனைத்து முயற்சிகளும் பயனளிக்கவில்லை. தொலைபேசிச் செய்திக்குக் கூட சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து எம்மால் பதில்பெற முடியாது போயிற்று. அனுப்பப்பட்ட கடிதங்கள் கூட எமக்குத் திருப்பி அனுப்பப்பட்டன" — என்றும் பிரேமா குடும்பத்தினர் குற்றஞ்சாட்டியதாக பி. பி. ஸி தெரிவித்தது.

லலித் அத்துலத்முதலி கொலையுண்ட இடத்தில் இருந்த தடயங்கள், ஸ்கொட்லண்ட்யார்ட் பொலீஸ் பிரிட்டனில் இருந்து வரும் வரை பேணிப் பாதுகாக்கப்பட்டது; ஆனால் அருகில் ஹில்டனில் தங்கியிருந்த ஸ்கொட்லண்ட்யார்ட் பொலீஸார் கொழும்புக்கு வருவதற்கு முன்னர் இராணுவ பவுஸர்களில் தண்ணீர் கொண்டு வரப்பட்டு பிரேமா கொலை

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அறிவித்தல்

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளரின் நிர்வாகத்திற்கு உட்பட்ட பிராந்தியத்தில் ஆண் / பெண் பரிசாரகர் பதவிக்கு விண்ணப்பித்துள்ள இளைஞர்கள் யுவதிகளுக்கு 18 - 06 - 1994 ஆம் திகதி 9-00 மணிக்கு யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிப் பாடசாலையில் பின்வரும் பாடங்களில் பரீட்சை நடைபெறும்.

தமிழ் மொழி 2 மணித்தியாலம்
சுகாதார அறிவு 1 மணித்தியாலம்

சம்பந்தப்பட்டோர் பரீட்சைக்குத் தோற்றுமாறும் அவர்களின் நிறுவனத் தலைவர்கள் அவர்களை பரீட்சைக்கு தோற்ற விடுவிக்குமாறும் வேண்டப்படுகிறார்கள்.

வைத்திய கலாநிதி
க. ச. சிவகுரு,
பிராந்திய வைத்திய அதிகாரி,
பதில் மாகாண பிரதிப் பணிப்பாளர்.
31 - 05 - 1994

சுகாதார சேவைகள்,
மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனை,
59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-8372]

---

விராட் விஸ்வப் பிரமனே நம

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 08 – 08 – 1957
விண்ணில்: 15 – 05 – 1993

அமரர்
## தெண்டாயுதபாணி முரளீதரன்
(பிரபல ஓவியர்)

திதி: 02 - 06 - 1994 (இன்று)

குடும்பத்தின் ஒளிவிளக்கே, அன்பின் இருப்பிடமே, பாசத்தின் உறைவிடமே, அஞ்சாத நெஞ்சுடன் அன்பு மொழியுடன் மங்காப் புகழுடன் மனைவி, மக்களுடன் மகிழ்ந்திருந்த நாட்கள் எல்லாம் மறைந்ததே ஓராண்டாய். ஒன்றென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் மாறாது உன் நினைவு, ஆறாது எம் துயரம். உமது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்;

தாய், மாமா, மனைவி, பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள்,
மற்றும் உற்றார், உறவினர்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

[31206]

---

# ஓராண்டு நினைவஞ்சலி



## திருமதி இராசமணி செல்லத்துரை

தோற்றம்: 20-02-1913
மறைவு: 15-05-1993

திதி: 02 - 06 - 1994

உள்ளம் உடையுதம்மா - வருடம் இரண்டு வந்தும்
உறக்கம் இல்லையம்மா
கள்ளமில்லா நெஞ்சங்கள் - நின்வடிவம் காணாது
கலக்கமடையுதம்மா.

எப்படி எடுத்துரைப்பேன் - என்வருத்தம்
செப்படி வித்தைகள் காட்டி
ஆளாக்கி விட்ட உன்னை
எப்படி மறந்து நிற்பேன்.

நினைத்துப் பயனில்லை - நெஞ்சம் கருக
அழுதும் பயனில்லை
நின்நினைவை நிதமும் பரவி நிற்க
நற்செய்கை பலவுண்டு
விழைகின்றோம் அதை நாடி.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

திருமதி கு. யோகராணி,
சங்கானை மேற்கு,
பண்டத்தரிப்பு.

(7427)

---

# DIPLOMA IN NURSING

தாதிப் பயிற்சியில்

## டிப்ளோமா

புதிய பிரிவு ஆரம்பமாகிவிட்டது

- இலவச ஆங்கில வகுப்புகள்
- விசேட பாரிமலி பயிற்சி
- சிறந்த விரிவுரையாளர் குழு
- செய்முறைப் பயிற்சி உள்ளடக்கியது

விபரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14 St PETER'S LANE,
JAFFNA.

[C-8374]

---

# மனையியல் வகுப்புகள்

❋ கேக் ஐசிங்
❋ பூ வேலைகள்
❋ தலையலங்காரம்

புதிய பிரிவு ஆரம்பம்:
**03 - 06 - 1994**

விபரங்களுக்கு:

## வட இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி. 14 சென்பீற்றர்ஸ் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

உரும்பிராய் தெற்கு,
[அன்னை பூபதி கலையரங்கம் அருகில்]
உரும்பிராய்.

[சி/8373]

---

# அரசாங்க எழுதுநர் சேவை

ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள
பொதுப் போட்டிப் பரீட்சைக்கான

## பயிற்சி வகுப்புகள்

செவ்வாய், வியாழன் தினங்களில்
3-30 — 5-30

ஆரம்பம்: 09 - 06 - 1994
மணி 3-30

பாடங்கள்:
மொழித் திறன் உளச்சார்பு
முழுக்கட்டணம் 200/-

★ பயிலுனர் ஆசிரியர் சேவை பயிற்சி வகுப்புகளும் நடைபெறுகின்றன.
★ அச்சடித்த பாடக்குறிப்புகள் இலவசம்.

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
16, 3rd CROSS STREET, JAFFNA.

[சி-8375]

---

# கண்ணீர் அஞ்சலி

## அமரர். அம்பிகாபதி பாலசுந்தரம்

(தலைவர் உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம் எழுதுநர் வவுனியா நகரசபை)

பிறப்பவர்கள் இறப்பது உண்மைதான் — இப்படி
மறைந்ததை எப்படித் தாங்குவோம்!
அறத்தினில் சிறந்து, அன்பினில் ஊறி,
ஆற்றிய சேவை மறந்திடக் கூடுமோ?
கடமையின் போது திடீரென மறைந்த
கவலையில் வாடும் மனைவி, மக்கள்,
சுற்றத்தாரோடு பகிர்கின்றோம் துன்பம்!

செயலாளரும்
எழுதுவினைஞர்களும்

நகரசபை, சாவகச்சேரி.

(சி/8376)

---

# ஆலயங்களில்

கோண்டாவில் கிழக்கு கேணியடி காளி அம்பாள் கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை 3ஆம் திகதி தொடக்கம் நடைபெறும். தேர் உற்சவம் 11 ஆம் திகதியும் தீர்த்த உற்சவம் 12 ஆம் திகதியும் நடைபெறும். (எ)

★ ★ ★

கரவெட்டிப்புனித அந்தோனியார் ஆலைத் திருவிழா 4 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 13 திகதி வரை தொடர்ந்து நடைபெறும் 12 ம் திகதி காலை முதன் நன்மையும் மாலை நற்கருணை வழிபாடும், பவனியும் நடைபெறும். 13 ஆம் திகதி காலை 7 மணிக்குத் திருநாளபலிப் பூசையும் அதைத் தொடர்ந்து திருச்சொரூபப் பவனியும் நடைபெறும். 4 ஆம் திகதி தொடங்கி 13 ஆம் திகதி வரை விசேட மறையுரைகள் நடைபெறும். (க)

★ ★ ★

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் மகோற்சவம் இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது தேர்த்திருவிழா 11 ஆம் திகதி காலையிலும், தீர்த்தத் திருவிழா 12 ஆம் திகதி மாலையிலும் நடைபெறும்.

மஹோற்சவ நாட்களில் தினமும் இரவு 8-30 முதல் 9-30 மணி வரை கம்பவாரிதி இ. ஜெயராஜின் மகாபாரத சிறப்புத் தொடர் சொற்பொழிவு இடம்பெறும். (எ)

## இன்று

சாரணியத்தில் ஜனாதிபதி விருது பெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள் நால்வருக்கு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரியில் விருது வழங்கும் வைபவம் இடம் பெறும்.

கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபரும், யாழ். மாவட்ட சாரண ஆணையாளருமான திரு. இ. மகேந்திரன் விருதுகள் வழங்கி மாணவர்களை கௌரவிப்பார். (ஒ)

## நாளை

இலங்கை வங்கியின் விவசாயம் புனர்வாழ்வுக் கடன் திட்டத்தின் கீழ் சுன்னாகம் இலங்கை வங்கி இடைக்காடு பகுதியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு குறுங்காலப் பயிர்ச்செய்கைக் கடன்களை வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

வலி - கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைப் பணியகத்தில் இடம்பெறும் இந் நிகழ்வுக்கு இடைக்காடு சனசமூக நிலையத் தலைவர் திரு. வி சிவபாலன் தலைமை வகிப்பார்.

(க-152-89)

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் உடுப்பிட்டி 'இளைய நிலா' இசைக் குழுவினரின் ''பக்தி கானங்கள்'' இடம்பெறும். திரு. எம். இரத்தினசிகாமணி அறிமுகவுரையை நிகழ்த்துவார் (எ)

## சிமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், ஜூன் 2
சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களின் மே மாதச் சம்பளம் இன்று வியாழன் காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை யாழ். வர்த்தக வங்கியிலும் நாளை முதல் தொழிற்சாலைப் பணிமனையிலும் வழங்கப்படும் என தொழிற்சாலைக் கணக்காளர் திரு. அ. பரமேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஓ)

---

# ஏமாற்றுப் பேர்வழிகள் நால்வர் கைது!

ஆலய திருப்பணிக்கு நிதி சேகரிப்பதாக பொதுமக்களை ஏமாற்றி பணம் பறித்த நால்வர் சாவகச்சேரி காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீசாலைப் பகுதி வீடொன்றில் தனித்திருந்த பெண்ணொருவரை ஏமாற்றி சங்கிலியை அபகரித்துச் சென்றதாக சாவகச்சேரி காவல் பணிமனையில் செய்த முறைப்பாட்டை அடுத்து இந்த நால்வரும் கைதாகினர்.

---

# யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி

## மாபெரும் கல்விக் கண்காட்சி-1994

## ST. PATRICK'S COLLEGE EXHIBITION-1994

காலம்: 6, 7, 8 ஜூன் 1994

அனுமதி நேரம்:
காலை 8-30 மணி தொடக்கம்
மாலை 3-30 மணி வரை

### சிறப்பம்சங்கள்

★ தமிழர் பிரதேச பொருளாதார, சமூக மொழி வளமும் தமிழ்ச் சித்த மருத்துவ இயலும்
★ உயர்தர வகுப்பு கணித, விஞ்ஞான, வணிக, கலைப் பாடங்களின் செயல் முறை
★ பண்டைய நாகரிகத்தின் விழுமியங்கள்
★ கணித விஞ்ஞானத்தின் வியத்தகு வித்தைகள்
★ வங்கியியல் நடைமுறைச் செயற்பாடுகள்
★ சமயங்களின் தத்துவார்த்தமும் நடைமுறையும், சிற்ப, சித்திர, ஓவிய, நடன, கலை பண்பாட்டம்சங்களும்
★ விநோத விளையாட்டுக்களும் இசை நிகழ்ச்சியும்

● குறிப்பு: I பிரவேசக் கட்டணம்:
5 ஆம் ஆண்டுக்கு மேல் ரூபா 5/-
5 ஆம் ஆண்டுக்கு கீழ் ரூபா 3/-

II இதுவரை தனிப்பட்ட அழைப்புக் கிடைக்காத பாடசாலைகளும் ஏனைய கல்வி நிறுவனங்களும் நேரடியாக அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு தங்களுக்கான நேரத்தைப் பெற்றுக் கொள்ளவும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

- கண்காட்சி அமைப்புக்குழு.

விளம்பர அன்பளிப்பு:

**அகிலன் புடவை நிலையம்**
121/1, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

**றியோ கிறீம் ஹவுஸ்**
75, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.

[31203]

---

# அந்தியேட்டி வீட்டிக்கிருத்திய அழைப்பு



## அமரர் வே. சண்முகவேல்
(சண்முகம்)
(சாந்திவிலாஸ் உரிமையாளர்)

தோற்றம்: 05 – 12 – 1943
மறைவு: 03 – 05 1994

03-05-1994 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரும், சாந்தி விலாஸ் உரிமையாளருமான அமரர் திரு. வே. சண்முகவேல் (சண்முகம்) அவர்களின் அந்தியேட்டி 01-06-1994 புதன் கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (02-06-1994) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை வைபவத்திலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், சகோதரர்கள்,
மைத்துனர்கள்.

185/1, இன்னர் லேன்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(31209)

---

# பருத்தித்துறை பிரதேசசபை

## பதவிகள் வெற்றிடம்

கீழ்க்காணும் பதவிகளுக்குரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு 18-45 வயது வரையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 15 - 06 - 1994 வரை என்னால் கோரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | நூலக உதவியாளர் | பதில் | புலோலி, குடத்தனை, செம்பியன்பற்று |
| 2. | ஆயுர்வேத வைத்திய அதிகாரி | பதில் | புலோலி, குடத்தனை, செம்பியன்பற்று |
| 3. | ஆயுர்வேத மருந்துக்கலவையாளர் | பதில் | புலோலி, குடத்தனை, செம்பியன்பற்று |
| 4. | ஆயுர்வேத தொழிலாளி | பதில் | புலோலி, குடத்தனை, செம்பியன்பற்று |
| 5. | காரியாலய காரிய சகாயர் | பதில் | புலோலி, செம்பியன்பற்று |
| 6. | இராக் காவலாளி | பதில் | குடத்தனை, செம்பியன்பற்று |
| 7. | வீதி மலகூட தொழிலாளி | பதில் | புலோலி |

உப அலுவலக எல்லைக்குட்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் தலைமை அலுவலகத்திலும், செம்பியன்பற்று, குடத்தனை உப அலுவலகத்திலும் பார்வையிடலாம்.

ஆறுமுகசுவாமி சிவசுவாமி,
தவிசாளர்,
பருத்தித்துறை பிரதேசசபை.

பருத்தித்துறை பிரதேசசபை,
புலோலி.
30-05-1994

(சி-8369)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில்
அருள்மிகு
ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோவில்
வருடாந்த மஹோற்சவம்

காலம் 02 — 06 — 1994 தொடக்கம்
13 — 06 — 1994 வரை நடைபெறும்.

| | |
|---|---|
| கொடியேற்ற வைபவம் | 02 – 06 – 1994 பகல் 12 மணிக்கு |
| கைலாசவாகன திருவிழா | 03 – 06 – 1994 மாலை |
| மஞ்சத் திருவிழா | 07 – 06 – 1994 மாலை |
| சப்பறத் திருவிழா | 10 – 06 – 1994 மாலை |
| இரதோற்சவ திருவிழா | 11 – 06 – 1994 காலை |
| தீர்த்தத் திருவிழா | 12 – 06 – 1994 மாலை |
| பூங்காவன திருவிழா | 13 – 06 – 1994 மாலை |

குறிப்பு:
தினமும் இரவு 8-30 மணி தொடக்கம் 9-30 மணி வரை அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் "கம்பவாரிதி" இ. ஜெயராஜ் அவர்கள் மகாபாரதம் எனும் பொருள் பற்றி சிறப்பு தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

இங்ஙனம்
திருவிழா உபயகாரர்.

விளம்பர அன்பளிப்பு:
ஐங்கரன் பந்தல் சேவை
இணுவில் மேற்கு, இணுவில்.
[31197]



நியூட்டன் அக்கடமி
இருபாலை வீதி. கோண்டாவில்.

O/L DAY CLASS
அதே தனித்துவம் வாய்ந்த
ஆசிரியர் குழுவினால்.........
மற்றுமொரு
புதிய பிரிவு ஆரம்பம்:
06 - 06 - 1994
அனுமதிகளை முன் கூட்டியே
பதிவு செய்யுங்கள்

O/L பிரத்தியேக கணிதம்
எஸ். கருணாகரன்
(வாரத்தில் 8 மணித்தியால வகுப்பு நடைபெறும்.)
PAPER CLASS சனி, ஞாயிறு
காலை 6-45 — 7-45
[31204]


# யேமனில் யுத்த நிறுத்தம் கொண்டு வர ஐ.நா. முயற்சி

ஐ.நா., ஜூன் 2

யேமனில் யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வரும் முயற்சியில் ஐ.நா.பாதுகாப்புச் சபை ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பாக பிரேரணை ஒன்றைத் தயாரிப்பது என்று ஐ.நா.பாதுகாப்புச்சபை நேற்றுத் தீர்மானித்தது.

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள வட யேமன் படைகளும் தென்யேமன் படைகளும் யுத்த நிறுத்தம் ஒன்றை முதலில் பிரகடனம் செய்ய வேண்டும் என்றும் பின்னர் தங்களுக்கு இடையேயான பிரச்சினைகளைத் தீர்க்கப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்றும் இப்பிரேரணையின் மூலம் ஐ.நா. பாதுகாப்புச் சபை கோரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1990 இல் யேமன் என்ற பெயரில் ஒரே நாடான இரு நாடுகளும், இப்போது இரு நாடுகளாகப் பிரிந்து சண்டையிட்டு வருகின்றன. யுத்த நிறுத்தத்துக்கு இணங்குவது, தென்யேமன் செய்த தனிநாட்டுப் பிரகடனத்தை ஏற்றுக் கொள்வதாக இருக்கும் என்று வடயேமன் அரசு கூறியுள்ளது. நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்துக்கு வடயேமன் இணங்க வேண்டும் என்று தென் யேமன் நிபந்தனை விதித்துள்ளது. (எ)

## யாழ். பல்கலைக்கழகத்திற்கு கம்பியூட்டர், ஜெனரேட்டர் எடுத்துவர அனுமதி மறுப்பு!

யாழ். பல்கலைக்கழகத்துக்கு கம்பியூட்டர், ஜெனரேட்டர், காஸ் சிலிண்டர் போன்றவற்றை எடுத்துவர பாதுகாப்பு இணைப்புக்குழு அனுமதி மறுத்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு இந்தப் பொருட்கள் அவசியம் தேவை என பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சிபாரிசு செய்து இருந்தும் இவற்றை எடுத்துவர பாதுகாப்பு இணைப்புக்குழு அனுமதி மறுத்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு சென்றிருந்த யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் கே. குணரத்தினம் இவ்விடயம் தொடர்பாக உயர்மட்ட படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியிருந்தார். (எ-3)

## யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களுக்கு நிதி உதவி இடை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள 967 சனசமூக நிலையங்களுக்கும் நாற்பத்தைந்து ஆண்டுகளாக உள்ளூராட்சித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வந்த வருடாந்த உதவித் தொகை 1992 ஆம் ஆண்டு முதல் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஒவ்வொரு சனசமூக நிலையத்திற்கும் 600 ரூபா உதவிப்பணமாக வழங்கப்பட்டு வந்தது.

வடக்கு - கிழக்கு மாகாண சபை இதற்கான நிதியை யாழ். மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கத் தவறியதே இதற்குக்காரணம்என்று தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்துபிரதேச உள்ளூராட்சிஆணையாளர் வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளருக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளார். (எ-162)

## இடம் பெயர்ந்தவர்களுக்கு இலவச தையல் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 2

வலி. வடக்குப் பிரதேசமான தெல்லிப்பளை அரச அதிபர் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்து முகாம்களிலும் முகாம்களுக்கு வெளியேயும் வசித்துவரும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு இலவச தையல் பயிற்சி வழங்கும் பயிற்சி நிலையம் ஒன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் மல்லாகம் நீதிமன்ற இடம் பெயர்ந்தோர் முகாமில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிலையத்தில் பயிற்சி பெறுவதற்காக 30 பெண்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஒன்பது மாதகால பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. (எ)

## ஏற்புவலி ஏற்பட்டு வயோதிப பெண் மரணமானார்

யாழ்ப்பாணம், ஜூன் 2

கடந்த ஒருவாரத்திற்கு முன் தென்னை ஈர்க்கு குத்திய வயோதிபப் பெண் ஒருவர் ஏற்புத் தடுப்பூசி போடாது கவனயீனமாக இருந்ததால் ஏற்பு வலிநோய்க்குள்ளாகி கடந்த ஞாயிறுக்கிழமை யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த தம்பு லட்சுமி (வயது 70) என்ற வயோதிபப் பெண்ணே மரணமானவர் ஆவார். (ஓ-15)

## விழிப்புலன் அற்றோர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம் ஜூன் 2

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் கைதடி நவீனட் பாடசாலையில் நடைபெற்றது.

சங்கத்தின் துணைத் தலைவர் திரு. பா. சந்திரசேகரம் கூட்டத்தை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்தினார். சங்கத்தின் புதிய செயற்குழு தெரிவு செய்யப்பட்டபோது திரு. ஆ. ரவீந்திரன் தலைவராகத் தெரிவானார். (இ)

## சு.கவின் மத்திய செயற்குழுவில் ஜி. எல். பீரிஸ்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினராக நியமிக்கப் பட்டிருக்கிறார்.

பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அண்மையில் தமது பதவியை ராஜினாமாச் செய்து விட்டு அரசியலில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார் என்பது தெரிந்ததே. (ஓ-எ)

## வடமராட்சிவீதியில் 'சீதனப் பேய்'!

வல்வெட்டித்துறை, ஜூன் 2

வடமராட்சிப் பகுதியில் இரவில் பல இடங்களிலும் வீதி நாடகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

சீதன ஒழிப்பை மக்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில், "சீதனப் பேய்" என்ற நாடகம் கடந்த சில நாட்களாக வீதிகளில் நடத்தபபட்டு வருகிறது.

கலை. பண்பாட்டுக்கழக பருத்தித்துறை வட்டமையும், பொலிகை கரையோரக் கலாமன்றமும் இணைந்து இந் நாடகத்தைத் தயாரித்துள்ளன. (ஓ-155)

## பிரிட்டிஷ் தபால் கட்டளை மாற்றலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

பிரித்தானிய தபால் கட்டளைகள் வைத்திருப்போர் இன்றுமுதல் தபாலகங்களில் தமது கட்டளைகளை மாற்றலாம் என யாழ். பிரதம தபாலதிபர் திரு. சு. சோமஸ்வரன் அறிவித்துள்ளார்.

ஒரு ஸ்ரேலிங் பவுண் 70 ரூபா 88 சதப்படி மாற்றலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (கூ-3)


தேடல் - 3
தேடல் ஒன்றாக இரட்டைச் சூட்டடுப்பும்,
தேடல் இரண்டாக ஆக்கிவாயுவும்,
வெற்றி நடை போடும் இவ்வேளையில்
இதோ தேடல் - 3
"காற்றுவலு இயந்திரங்கள்"

எரிபொருள் தடையால்
ஏங்கும் விவசாயிகளே.
மின்கலங்களை மின்னேற்றிப் பாவிக்கத்
துடிப்பவர்களே,
உங்கள் சுமைகளைப் போக்கிச்
சுகமாக்க வந்துள்ளது.
"காற்றுவலு இயந்திரங்கள்"

* நீரிறைக்க * மின்பிறப்பாக்க
* மின்கலங்களுக்கு மின்னேற்ற

காற்றுவலு இயந்திரங்கள்



இப்பொழுது திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்திலும், கந்தரோடை பிரதான வீதியிலும் இவை இயங்கிக் கொண்டிருக்கின்றன.

உங்கள் தேடலுக்கு எங்கள் முகவரி:
சக்திப் பருதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
அரசியல்துறை - தமிழீழ
விடுதலைப் புலிகள்
காங்கேசன்துறை வீதி, தாவடி
தமிழீழம்

"எரிபொருள் தடையை இனிக்காற்றாலை உடைக்கும்,
நீரிறைக்கும், மின்வழங்கும் புதிய யுகம் படைக்கும்"
[சி-8365]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

**உடன் தேவை**

பால் மா வெற்றுப் பக்கட்டு கள் மொத்தமாகவும், சில் லறையாகவும் பெற்றுக் கொள்ளப்படும். வைத்திருப் பவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். அண்ணா தொழிலகம் இணுவில். (சி-8253)

**விதைகள் தேவை**

மனை வேம்பு, கத்தேக்கு (கத்தாப்பு) விதைகள் வாங்கு கிறோம். ''மிக்லைவற்'' (சி-8370)

**G. A. Q அரசறிவியல்**

ஜெயகாந்தனின் விடை யாக்கத்துடன் விற்பனையா கிறது. விலை ரூபா 40/- யாழ். நகர் புத்தகசாலை களில் கிடைக்கும். (7435)

**அல்சேஷன் குட்டிகள்**

ஒரு மாதம் நிரம்பிய தூய நல்லின அல்சேஷன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. யோகராசா, ஜொலிஹவ்ஸ், முகமாலை. (தேவாலய முன் றோட்) (7426)

**தவறிவிட்டது**

சிதம்பரப்பிள்ளை சௌசனா தேவியின் தேசிய அடையாள அட்டை, பல்கலைக்கழக அடையாள அட்டை மற்றும் சில பொருட்களுடன் பணப்பை குமாரசாமி வீதிச் சந்திக்கு அருகில் தவறிவிட் டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைக்கவும். எஸ், சண்முகநாதன், 25, கைலாசபிள்ளையார் கோயில் வீதி, நல்லூர். (31207)

---

யாழ். பல்கலைக்கழகம்

### மகாபொலந் கொடுப்பனவு

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான 4ஆம் தவணை பணத்தை 06-06-94 முதல் யாழ். பல் கலைக்கழகத்தில் அமைந் துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் பெற் றுக் கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட் டுள்ளன. இதற்கான நேர அட்டவணை பல்கலைக் கழக அறிவித்தல் பலகை யில் இடப்பட்டுள்ளது.

— பதிவாளர்.

(சி-8371)

---

## G. A. Q Ist. IN Com. [95]

### யாழ். பல்கலைக்கழகம்

(வெளிவாரி)

மேற் கூறப்பட்ட பாடநெறிக்கான விண்ணப் பங்கள் பல்கலைக் கழகத்தினால் கோரப் பட்டுள்ளன.

இதற்கான விரிவுரைகள்:

**ஆரம்பம்: 04-06-1994**

விவரங்களுக்கு:

எஸ். அருள்நங்கை,

### புதிய உயர் கல்லூரி

ஆரிய குளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

[சி-8254]

---

## கண்ணீர் அஞ்சலி

யா/மானிப்பாய் மெமோறியல் கல்லூரியின் பழைய மாணவரும், முன்னாள் விளையாட்டுத் துறைப் பேராசானுமாகிய

### ஆதர் கணேசபிள்ளை யோசவ்

அவர்கள்

31-05-1994இல் அமரத்துவமடைந்த செய்தி அறிந்து ஆறாத்துயரடைகிறோம்.

அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்ப துடன் அன்னாரை இழந்து துயருறும் அனைவருக் கும் எமது தேற்றுதலைக் கூறுகிறோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/மானிப்பாய் மெமோறியல் கல்லூரி,

(31205)

---

## பயிலுநர் ஆசிரியர் தெரிவு
## எழுதுநர் சேவை, பிற சேவைகள்

போட்டிப் பரீட்சைக்கான

### விசேட பயிற்சி வகுப்புக்கள்

ஆரம்பம்: **06 - 06 - 1994**
பிற்பகல் 3 மணி

பாட நெறி: மொழித்திறன்,
பொது விவேகம்,
பொது அறிவு.

★ 1½ மாத கால பயிற்சி நெறிகள்
★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
★ வகுப்புகள் - திங்கள், புதன், வெள்ளி
★ முழுப்பயிற்சிக்குமான கட்டணம் ரூபா 300/-

### அஸ்ரன் கல்வி நிலையம்

101/10, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகில்)

[சி-8249]

---

## திருமணம்

அன்புடையீர்!

| மணமகன் | | மணமகள் |
|---|---|---|
| **செந்தில்ராஜ சர்மா** | ✻ ✻ ✻ | **தர்மவதி** |

காலம்: 03 - 06 - 1994 வெள்ளிக்கிழமை காலை 6-44 — 8-45
இடம்: நல்லூர் சிவன் கோயில்

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

மாவை து. சுந்தரமூர்த்திக் குருக்கள்,
பக்கஸ்லேன்,
மானிப்பாய்.

சோ. வரதராச சர்மா,
''செந்திலகம்'',
21, விதானையார் வீதி,
கொழும்புத்துறை.

(31172)

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)**

**O/L**
**DAY CLASSES (8 30 – 2.00)**
**EVENING CLASSES (4 15 6'15)**
**SAT. SUN. CLASSES (8 00 – 2.00)**

✻ மொத்தம் 9 பிரிவுகளில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
✻ வாராவாரம் Paper Class இலவசமாக நடைபெறுகின்றது.
✻ திறமையால் பிரபல்யமான திறமைமிக்க யாழ். முன்னணி ஆசிரியர் களின் ஒன்றிணைந்த சேவை.

(சி/8244)

---

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி ரஜினி பாலசிங்கம்

(சண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி)

மலர்வு: **27-05-1969**
உதிர்வு: **31-05-1986**

திதி: 02-06-1994

மகளே உன்னை பிரிந்து ஆண்டுகள் எட்டு சென்றதம்மா!
எமதில்லம் நீ இல்லாமல் இருண்டதம்மா
ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
நீ மீளாத்துயிலில் சென்றதெங்கே!


உமது பிரிவால் துயருறும்;
அப்பா பாலசிங்கம்
(ரஜினி கிறீம் ஹவுஸ்),
அம்மா, தம்பி ரஞ்சித்,
உற்றார், உறவினர்கள்:

35, குருசோ வீதி,
சண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(31201)

---

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தமிழீழ விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியல் பிரிவுப் பொறுப்பாளரும் வடமராட்சி பதில் பொறுப்பாளருமான

### மேஜர் சலாம்

### வ. சி. நல்லராசன் (பழம்)

இமையாணன்

பிறப்பு: **17-09-1956**
வீரச்சாவு: **02-06-1988**

விடுதலைக் கனவு சுமந்து - ஈழத்தில், வளம்வந்த புலி இளவல். கடுபடைக்கலங்கள் தாங்கி - எல்லையைக் காத்து நின்றவன். தேதிகள் குறித்து தேடிய, பாரதப் படையின் மிதித்தவன். சதிகள் பொதிந்த சுற்றிவளைப் பில் நிமிர்ந்தே நின்றவன். தலைக்குக்கூட எதிரி, விலைகள் பேசும் கணங்களைக் கண்டவன். வலையில் வீழ்ந்தும் மடங்கிடாமல் குப்பிகடித்த ஈழப்புலியிவன். நாளை மலரும் ஈழப்பூமியை இளங்கண்டே உரைத்த வன். மாலைகள் சூடி வாழ்ந்திடாதவன் கல்லறையிலும் கௌரவம் பெற்றவன். நீண்டு செல்லும் வரலாறு வாழ்வில் ''சலாம்'' மாவீரரானான்.

- நண்பர்கள்.

(31193)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
392/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## எந்தத் தட்டில் எடை பார்ப்பது?

கண்டியர்களின் நலன்களைப் பேணுவதற்குத் தனியான பிராந்திய நிர்வாக அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும். கண்டி ராஜதானியின் கீழ் இருந்த உள்ளூராட்சி அமைப்புகளை நிர்வகிக்கக் கூடியதாக இந்தத் தனியான பிராந்திய நிர்வாக அமைப்பு அமைவது அவசியம்.

இவ்வாறு குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளனர் கண்டியச் சிங்கள மக்கள்.

தமிழர்கள் தமக்கென அரசு - நிர்வாகம்— ஒன்றை உருவாக்க வேண்டும் என்று குரல் கொடுத்த போது, அக்கோரிக்கையை ஏற்றால், கண்டியச் சிங்களவர், கரையோரச் சிங்களவர் ஆகியோரும் அவ்வாறே கேட்பார்கள். அதனால் நாடு பல கூறுகளாகிப் போகும் என்று சிங்கள அரசியல்வாதிகள் பலரும் அச்சம் தெரிவித்தனர்.

''ஹெல உறுமய'' போன்ற சிங்களத் தீவிரவாத அமைப்புகளும், காமினி ஜெயசூரியா போன்ற பேரினவாதிகளும் தொண்டமானும் மலையகத்தைப் பிரித்துத் தருமாறு கேட்பார் என்று துவேசம் கக்கியிருந்தார்கள்.

இப்போது கண்டியர்களுக்கு தனிப் பிராந்திய நிர்வாகம் என்ற கோரிக்கை எழுவதற்கு கண்டியர்கள் சுதந்திரத்துக்குப் பின்னரும் புறக்கணிக்கப்பட்டதும், அவர்களது குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு அரசு முன்னுரிமை கொடுக்கப்படாமையுமே காரணம் என்று பிரஸ்தாப மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். அதே வேளை வேறு ஒரு உள்நோக்கமும் உண்டு. மலையகத் தமிழர்களுக்குப் பிரசா உரிமை கிடைத்திருப்பதால், அப்பகுதிக் காணிகள் அவர்களுக்குப் போய்விடும் ''அபாயம்'' உருவாகிறது. அதனைத் தடுப்பதற்கு, கண்டியர்களின் காணிகளை அவர்களுக்கே உரித்தாக்குவதற்கு நிர்வாகம் தமது கைக்கு வரவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.

பிரதான தேர்தல்கள் இரண்டு இவ்வருடம் நடக்கப் போகின்றன. அதனால் தங்கள் வாக்குகளை வைத்துக் கொண்டு அரசியல் கட்சிகளுடனும் தலைவர்களுடனும் பேரம் பேசும் உத்தியைச் சிங்களவர்கள் இப்போதே ஆரம்பித்து விட்டனர். கண்டியர்களின் கோரிக்கையும் அதே வகையினதே. அது ஒருபுறமிருக்க—

கண்டியர்களின் தனிப் பிராந்தியக் கோரிக்கை தமிழர்களின் தமிழீழக் கோரிக்கைக்கு தன்னாட்சிக் கோரிக்கைக்கு ஓரளவேனும் சமாந்தரமாக உள்ளதாகக் கருதிக் கொள்ளாமல் இருக்க முடியாது.

தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டதால், அவர்களின் குறைகளைத் தீர்க்க சிங்கள அரசுகள் பின்னின்றதால், அவர்களது தாயகத்தை சிங்களக் குடியேற்றம் மூலம் கபளீகரம் செய்ததால் —

அவர்கள் தமது தாயகத்தை மீள்விக்கவும், தமக்கென ஓர் அரசை நிறுவவும் போராடத் துணிந்தார்கள்; போராடுகிறார்கள்.

கண்டியர்கள், சிங்களவர்களாக இருந்து கொண்டே தாம் புறக்கணிக்கப்படுவதாக கூறும் போது—

தமிழர்கள் நிலை எவ்வாறு இருக்கும் என்பதனை எவரும் இலகுவில் புரிந்து கொள்ளலாம்.

தமிழர்கள் தமது குறைகளைப் போக்குவதற்காக தமக்குரித்தான உரிமைகளைக் கேட்பதனை பிரிவினைவாதம், பயங்கரவாதம் என்பவர்கள் —

கண்டியர்களின் தன்னாட்சிக் கோரிக்கையை எந்தத் தட்டில் போட்டு எடைபார்க்கப் போகிறார்கள்?

கண்டியச் சிங்களவரின் தன்னாட்சி உரிமை ஏற்கப்படுமானால், தமிழர்களின் தன்னாட்சி கோரிக்கை ஏன் அங்கீகரிக்கப்படக்கூடாது? கண்டி, கோட்டே, யாழ்ப்பாண ராஜதானிகள் தனித்தனியே இயங்கியதை சிங்கள அரசியல்வாதிகளுக்கு இது நினைவுபடுத்தட்டும்!

# மாணவர் அடையாள அட்டை தாமதமின்றிக் கிடைக்கும்

## அரச அதிபர் நடவடிக்கை

வலிகாமம் தெற்கு, ஜூன் 2

பதினாறு வயதை ஆரம்பித்துள்ள பாடசாலை மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டையை விரைவாகவும், இலகுவாகவும் பெற்றுக் கொடுக்க யாழ். அரச அதிபர் முன்வந்திருக்கிறார்.

உரிய வயதை அடைந்தும் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள இதுவரை விண்ணப்பிக்காத மாணவர்கள், உடனடியாகத் தங்கள் விண்ணப்பங்களை பாடசாலை அதிபர்கள் ஊடாக தமக்கு அனுப்பி வைத்தால் தாம் அவற்றை ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு அனுப்பி அடையாள அட்டைகளை விரைவாகப் பெற்றுத் தரமுடியும் என்று யாழ். அரச அதிபர் தெரிவித்திருக்கிறார்.

விண்ணப்பங்களுடன் பிறப்புச் சான்றிதழின் பிரதிகள் இணைக்கப்படத் தேவையில்லை என்றும் —

அதிபர்கள் யாழ். செயலக ஆட்பதிவுத் திணைக்களத்தில் இருந்து தேவையான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் யாழ். அரச அதிபர் மேலும் அறிவித்திருக்கிறார். (இ-எ-152)

# பிரேமா கொலை விசாரணை குறித்து மேலும் சந்தேகம்

கொழும்பு, ஜூன் 2

பிரேமதாஸா கொலை பற்றி புதிய விசாரணை ஒன்றை நடத்த வேண்டும் என்று பிரேமதாஸா குடும்பத்தினர் வற்புறுத்திவரும் இவ்வேளையில்

பிரேமாகொலையுண்ட தினம் விசாரணை நடத்தப்பட்ட விதம் குறித்து மேலும் பல கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது:

பிற்பகல் 12.45 மணியளவில் குண்டு வெடிப்புச் சம்பவம் ஆமர்வீதிச்சந்தியில் இடம்பெற்றது.

பிற்பகல் 1-30 மணியளவில் அந்த இடம்முற்றாக துப்புரவு செய்யப்பட்டது.

நீதிவானின் உத்தரவின் பேரில்தான் அவ்வாறு செய்யப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

எனினும் நீதிவான் தாம் அவ்வாறு உத்தரவிடவில்லை என்று தெரிவித்து விட்டார்.

இப்போது எழுந்துள்ள இன்னொரு குற்றச்சாட்டு, குண்டு வெடிப்பு நடந்த இடத்துக்கு வெடிபொருள் நிபுணர் ஒருவரை அழைப்பதற்கு பதிலாக துப்பாக்கிக் குண்டு பற்றிய நிபுணர் ஒருவரையே பொலீஸார் அழைத்தனர் என்பதாகும்.

இக்கொலை பற்றி விசாரிக்க விசேட குழுஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்று துணாஞ்சலி விடுத்த வேண்டுகோளை ஜனாதிபதி நிராகரித்தது; கொலை பற்றிய விசாரணையில் மேலும் குழப்பங்களை ஏற்படுத்தி உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஐந்து சந்தேக நபர்கள் இன்னமும் கைது செய்யப்பட வேண்டியுள்ளதைத் தவிர மற்றப்படி விசாரணை முடிந்து விட்டதாக பொலீஸார் கூறுகின்றார்கள்.

சந்தேக நபர் இன்னமும் கைது செய்யப்பட வேண்டியிருக்கையில் விசாரணை முடிவடைந்து விட்டது என எப்படிக் கூறமுடியும் என்று சில வட்டாரங்கள் கேட்கின்றன. (இ-எ)

## ஐ.தே. கவின் செயற்குழுவை டி.பி. மாற்றி அமைப்பார்

### காமினிக்கு இடம்; சொத்தி உபாலி நீக்கம்

கொழும்பு, ஜூன் 2

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவை ஜனாதிபதி விஜேதுங்கா இம்மாத முற்பகுதியில் மாற்றி அமைக்கவிருக்கிறார் என்றும்—

காமினி திஸநாயக்கா உட்பட பதினெட்டு பேரை புதிதாக செயற்குழுவில் நியமிக்க அவர் முயற்சித்து வருகிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஐ. தே. க. செயற்குழுவில் சொத்தி உபாலி உறுப்பினராக இருப்பது கட்சிக்கே அவமானம் என்று கட்சியின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

செயற்குழு மாற்றி அமைக்கப்படும் போது சொத்தி உபாலி நீக்கப்படுவார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## கடும் காற்றினால் குளவி கலைகின்றது

### 10 க்கு மேற்பட்டோர் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, ஜூன் 2

தென்மராட்சிப் பகுதியில் குளவி கொட்டுவதால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

தற்போது கடும் காற்று வீசுவதால் பனை மரங்களிலிருந்து ஓலைகள் விழுகின்றன. அவற்றில் இருந்து வெளிப்படும் குளவிகள் அவ் வழியே செல்பவர்களைத் தாக்குகின்றன.

கடந்த வாரம் இவ்வாறு குளவி கொட்டியதால் பாதிக்கப்பட்ட பலர் தென்மராட்சிப் பகுதி ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வரை பத்துக்கும் மேற்பட்டோர் வார்ட்டுகளில் தங்கி சிகிச்சை பெற்றுள்ளனர். (இ-117)

## நுவரெலியா செயலக எரிப்புச் சம்பவம்

# மேயர் திலகா - காமினி இடையே கருத்து மோதல்

நுவரெலியா செயலகம் எரிக்கப்பட்ட சம்பவம் குறித்து நுவரெலியா மாநகரசபை மேயர் திருமதி நளின் திலகா ஹேரத்துக்கும் முன்னை அமைச்சர் காமினி திஸநாயக்காவுக்கும் இடையே கருத்து மோதல் ஏற்பட்டிருக்கிறது.

செயலக எரிப்பு சம்பவம் திட்டமிடப்பட்டதொன்று என்று கூறப்படுவதை மேயர் மறுத்ததுடன்— தமது போட்டி ஐ.தே.க. அரசியல் வாதி ஒருவரின் காடையர்களே கச்சேரியை எரித்ததாகக் குற்றஞ் சாட்டினார்.

இக் குற்றச்சாட்டு பற்றி தாம் ஊகம் எதனையும் தெரிவிக்க விரும்பவில்லை என்று காமினி திஸநாயக்கா கூறினார். இச்சம்பவம் குறித்து பூரணவிசாரணை முடியும் வரை தாம் காத்திருக்கப் போவதாகவும் அவர் கூறினார்.

மேயரின் நடவடிக்கைகளை காமினி திஸநாயக்கா கண்டித்து வருபவர் என்பது தெரிந்ததே. (இ-எ)

# மாணவர் எழுச்சி நாள் சுவரொட்டிகள், பதாகைகள்

## பல இடங்களில் தெரு நாடகம்

ஜூன் 5 மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு வலிகாமம் வடக்கு பகுதியில், வீதிகள் யாவும் வசனங்கள் அடங்கிய பதாகைகளும், சுவரொட்டிகளும் காணப்படுகின்றன.

பாடசாலைகளில் மேற்படி நாளைக் கொண்டாடும் வகையில் கலை நிகழ்ச்சிகளும், போட்டிநிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

தமிழ் மாணவர் மீது அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அடக்கு முறைகளைச் சித்திரிக்கும் வகையில் சுவரொட்டிகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கிடையில் மாணவர் எழுச்சி நாளை யொட்டி தென்மராட்சி கல்விக் கோட்ட மாணவர் அமைப்பின் தெரு நாடகம் தென்மராட்சிப் பகுதியில் தினமும் நடத்தப்பட்டு வருகிறது (இ-117-13)

## விசர்நாய் தடுப்பூசி ஏற்றும் வேலை இன்று முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம் ஜூன். 2

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்துக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு விசர்நாய் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றும் வேலைகள் இன்று வியாழன் முதல் ஆரம்பமாகின்றன.

இன்று தடுப்பூசி மருந்து ஏற்றப்படும் இடங்கள் வருமாறு:-

காலை 8 மணி தொடக்கம் 10 மணி வரை — ஆடிருகுடி வீதி கலைமகள் சனசமூக நிலையம், பலாலி வீதி கந்தர்மடம் ச. ச. நிலையம்.

காலை 10 மணி தொடக்கம் பி. ப. 12-30 மணி வரை — கன்னாபுரம் ச. ச. நிலையம், கல்லூரி வீதி, கற்குளம் ச. ச. நிலையம், கல்லூரி வீதி.

பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணி வரை — நாவாந்துறை செல். நிக்கொலஸ் ச. ச. நிலையம், நாவாந்துறை அண்ணா ச. ச. நிலையம். (இ-17)

**கல்வியென்பது சுடர்ச்சுடர் பொன்னாம்**
**கற்கிலாதவர் முகத்திரு புண்ணாம்**

## ஆங்கில உதவி ஆசிரியர் போட்டிப் பரீட்சை

எதிர்வரும் 11 ஆம் திகதி ஆங்கில உதவி ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றன.

இப்பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் நேற்று தபாலில் சேர்க்கப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை— தொழில் நுட்ப கல்லூரி பரீட்சைகளுக்கான வினாத்தாள்களும் நேற்று வந்து சேர்ந்தன. (இ-3)

## புலிகளின் குரல் வானொலியில்

02 - 06 - 1994
வியாழன் இரவு

- ★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்.
- ★ 8-10 — உரை — தமிழ் மொழியின் எதிர்காலம்
- ★ 8-20 — உழைப்போம் உயர்வோம் - நிகழ்ச்சியின் நேர்காணல் இடம் பெறும்.
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — ஏட்டிலிருந்து — நிர்வாகக் கலையைத் தெரிந்து கொள்ளுங்கள் என்ற நூலிலிருந்து ''ஒருங்கிணைப்பு'' எனும் கட்டுரையின் சில பகுதி
- ★ 8-50 — ஒப்பரேஷன் ஏழுசத்திகள் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''தோல்வி காணும் சிங்களப் படை''

03 - 06 - 1994
வெள்ளி காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — விடுதலை கானங்கள்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ [illegible]

## அந்தோனியார் உற்சவத்துக்கு விசேட பஸ்சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 2

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு வெளியூர் பக்தர்களின் நன்மை கருதி விசேட இணைப்பு பஸ்சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இந்த பஸ்சேவை எதிர்வரும் நான்காம் திகதி தொடக்கம் நடைபெறும்.

யாழ். ஸ்ரான்லி மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கும் கொழும்புத்துறை துறைமுக பஸ்தரிப்பு நிலையத்திற்கும் இடையில் இந்த விசேட பஸ்சேவைகள் நடைபெறும் என பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குத் தந்தை கி. ஜோ. ஜெயக்குமார் அடிகளார் தெரிவித்தார். (இ-17)

## கூடுதலான முத்திரை கப்பலில் வரும்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். குடாநாட்டில் உள்ள தபாலகங்களில் ஒரு ரூபா முத்திரைகளுக்கு நீண்ட நாட்களாகத் தட்டுப்பாடு நிலவுகிறது. மே மாதம் 6 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வந்த கப்பலைத் தொடர்ந்து வந்த கப்பல்கள் எதிலும் முத்திரைகள் எடுத்துவரப்படாமையே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து யாழ் பிரதம தபாலதிபரிடம் கேட்ட போது: அடுத்து பருத்தித்துறைக்கு வரும் கப்பல்களில் வழமையாக வரும் முத்திரைகளின் தொகையை விட இரண்டு மடங்கு கூடுதலாக தருவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (இ-162)

## யாழ். திட்டமிடல் பணிமனை:

# நேர்முகப் பரீட்சைக்கான 137 கடிதங்கள் தபாலில்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். திட்டமிடல் பணிமனையில் நேர்முகப் பரீட்சை நடத்தப்படுவதற்காக கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட 497 கடிதங்களில் 137 கடிதங்களை கடந்த 31 ஆம் திகதி வரை உரியவர்கள் வந்து நேரடியாக பெற்றுக் கொள்ளவில்லை. இதன் காரணத்தினால் அவர்களது விலாசங்களுக்கு அக்கடிதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் அவர்களின் நேர்முகப் பரீட்சைக்குரிய திகதிகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை உரிய நேரத்தில் அனுப்பாமை —

ஏற்கனவே 1992இல் கொள்ளைத் திட்டமிடல் அமைச்சில் பதிவு செய்தமை—

1994இல் விண்ணப்பித்தும் நேர்முகப் பரீட்சைக் கடிதம் கிடைக்காமை — ஆகிய காரணங்களைக் காட்டி மேன்முறையீடு செய்தவர்களுக்குரிய நேர்முகப் பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்தப் பகுதிக்குள் வருவோர்களாக இருந்தும் இதுவரை திட்டமிடல் பணிமனையுடன் தொடர்பு கொள்ளாதவர்கள் உடனடியாகத் திட்டமிடல் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். (இ)

## வேம்பிராய் கிராமிய பாசறையில் பொருண்மிய மேம்பாட்டு நடவடிக்கை

சென்ற மாதம் 20 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரையில் புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டி மேற்கு ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய வேம்பிராய் கிராமத்தில் நடைபெற்ற கிராமியப் பாசறை நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

முதலில் அங்குள்ள மக்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களின் பொருண்மியப் பிரச்சினைகள் பற்றிக் கதைத்து கலந்துரையாடி அவர்களுக்கு மேம்பாடு தொடர்பான ஆலோசனை கள் வழங்கப்பட்டன.

அத்துடன் கோழி வளர்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு அங்கு பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகளும் சில பயனாளிகளுக்கு நல்லின அடை முட்டைகளும் வழங்கப்பட்டதுடன் கோழி வளர்ப்புக்கான ஆலோசனை மற்றும் கால்நடை நோய் தடுப்பூசி, சினைப்படுத்தும் சேவை என்பனவும் இடம்பெற்றன.

மேலும் இதுவரை பெறாதவர்களுக்கு சமகார அறிமுக அட்டை வழங்கப்பட்டதுடன் மக்களுக்கு இலவசமாக இரட்டைச் சூட்டடுப்புக் கட்டும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. [இ]

## வாலிபரின் நல்ல பல்லை மாறிப் பிடுங்கிய டாக்டர்!

பாதிப்புக்கு உள்ளான (சூத்தைப்) பல்லைப் பிடுங்குவதற்காக ஆஸ்பத்திரிக்குச் சென்ற வாலிபர் தமது நல்ல பல் ஒன்றை பறிகொடுத்துவிட்டு, வேதனையுடன் வீடு திரும்பினார்.

வடமராட்சியில் உள்ள அரச ஆஸ்பத்திரி ஒன்றில் அண்மையில் இச் சம்பவம் இடம்பெற்றது.

ஆஸ்பத்திரிக்குச் சென்ற பொலிகண்டி வாலிபருக்கு விறைப்பு ஊசி போடப்பட்டது. பல் பிடுங்கும் உபகரணத்துடன் வந்தார் டாக்டர்.

வாயைத் திறக்குமாறு கூறிய அவர், வாலிபரின் பல்லை இழுத்தெடுக்க முற்பட்டார். விறைப்பூசி போடப்பட்டிருந்தாலும், அந்த வாலிபர் அது தமது நல்லபல் என்று உணர்ந்து கொண்டு 'சைகை' மூலம் பிடுங்கவேண்டாம் என பல தடவைகள் கூறினாராம்.

எனினும் டாக்டர் தமது காரியத்தில் 'கண்ணும் கருத்துமாக' இருந்து, நல்ல பல்லை இழுத்து வெளியே எடுத்தார்.

விறைப்பு எடுபட்டவுடன் அந்த வாலிபர் விஷயத்தை டாக்டரிடம் விளங்கப்படுத்தினார். டாக்டர் ''சொறி'' என்று ஆங்கிலத்தில் மன்னிப்புக் கூறி அந்த வாலிபரை வீட்டுக்கு அனுப்பி வைத்தார்! நல்ல பல்லை இழந்து வலிதாங்கிய இவருக்கு வயது 34. (இ-15)

# போராளிகளின் சுமையை மக்கள் குறைப்பது எப்போது?

## புதுவை இரத்தினதுரை கேட்கிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 2

இப்போது போராளிகள் போர் முனையில் நின்று எதிரியுடன் போராடிக் கொண்டே நிர்வாகம், போக்குவரத்து, வெளியீடு, கலை போன்ற ஏனைய துறைகளிலும் ஈடுபடுகிறார்கள். எல்லாவற்றையும் போராளிகள் எப்படிச் சுமப்பது?

இத்துறைகளில் மக்களும் ஈடுபட்டுப் போராளிகளின் சுமையைக் குறைப்பது எப்போது? கலைப்படைப்புகளை உருவாக்குவதை இன்னும் எத்தனை காலத்துக்கு போராளிகளின் கைகளில் விடப்போகிறீர்கள்? மக்களிடையே உள்ள கலைஞர்கள் கொஞ்சம் பளுவைச் சுமக்கக் கூடாதா?

இவ்வாறு கேட்டார் தமிழீழ விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை.

நிதர்சனம் குறும்படம் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு, ஆறு குறும்படங்கள் கொண்ட ஒளிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவும், அதற்றின் இரையிடும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றன. யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் தலைமை வகித்தார்.

விழாவில் பேசுகையில் திரு. புதுவை இரத்தினதுரை மேலும் குறிப்பிட்டதாவது! இந்த மண்ணில் பிறந்ததற்காக, இப்படி ஒரு காலத்தில் வாழ்வதற்காக நாம் பெருமைப்படலாம். இங்குள்ள கொடுமைகளை, அவலங்களைப் பார்த்துக் கொண்டு அவற்றுக்குக் கலை வடிவம் கொடுக்காமல் கலைஞர்கள் பார்த்துக் கொண்டிருக்கலாமா?

மக்கள் எல்லோரும் தத்தமக்கு ஆற்றல் திறமை உள்ள துறைகளில் ஈடுபட்டு உழைப்போமானால் எமது போராட்டத்துக்கு அதிக வயது ஏற்படுவதற்கு முன்னரே விடுதலை கிடைப்பது நிச்சயம் — என்றார்.

திரு. கரிகாலன் தமது தலைமையுரையில் தெரிவித்ததாவது!

இங்கு தயாரிக்கப்பட்ட குறும்படங்கள் போராட்டத்தையும், போராட்டத்துக்கு மக்கள் தரும் ஆதரவையும் சித்திரிப்பனவாக உள்ளன. இத்தகைய குறும்படங்கள் ஊடாக எமது தேசத்தின் ஒவ்வொரு மூலையிலும் நடக்கும் நிகழ்வுகளை அனைவரும் அறியும் வாய்ப்பு ஏற்படுகிறது. வெளி உலகத்தாருக்கும் எமது நிலையைத் தெரியப்படுத்த முடிகிறது. ஆகையால் இத்தகைய படைப்புகள் வெளிவருவதற்கு மக்கள் ஆதரவு தேவை— என்று கூறினார்.

நிதர்சனம் பொறுப்பாளர் திரு தமிழன்பன் பேசுகையில் கூறியதாவது:

வெளிநாடுகளில் எமது போராட்டத்துக்கு எதிரான கருத்துக்களை அரசும், விஷமிகள் பலரும் பரப்பி வருகின்றனர். அவர்களின் அந்த முயற்சிகளை முறியடித்து, இங்குள்ள உண்மையான நிகழ்வுகளை வெளிநாட்டாருக்கு வழங்க இத்தகைய குறும்படங்கள் பெரிதும் உதவும்.

எமது ஒளிச்சுருள்களைப் பார்த்த வெளிநாட்டவர்கள் எங்கள் போராட்டத் திறன் கண்டு வியப்படைகிறார்கள் இவற்றின் மூலம் எங்கள் போராட்ட நிகழ்வுகள் ஆவணப்படுத்தப்படுகின்றன— என்றார்.

குறும்படத் தொகுப்பு ஒளிப்பதிவு நாடாவை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி வெளியிட்டு வைக்க, மகளிர் அரசியல் பொறுப்பாளர் செல்வி ரதி அதனைப் பெற்றுக்கொண்டார். திரு. க. யோகராசா குறும்படங்கள் குறித்து மதிப்புரை நிகழ்த்தினார். (அ)

**உழைத்து வாழ விரும்பு, அதற்கே**
**உற்ற துணையைத் தேடு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு:

# தெளிவான நிலைப்பாட்டைத் தெரிவிக்குமாறு முத்தரப்பிடமும் ஒற்றுமை அமைப்பு கேட்கின்றது

கொழும்பு, ஜூன் 2

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்த தங்களின் நிலைப்பாட்டை சந்தேகமறத் தெரிவிக்கும்படி—

ஐக்கிய தேசியக் கட்சி, பொது மக்கள் ஐக்கிய முன்னணி, மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆகியவற்றை—

இலங்கையில் சமாதானத்துக்கும் நீதிக்குமான உலக ஒற்றுமை அமைப்பு கோரியுள்ளது. கடந்த வாரம் இந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பில் மதகுருமார்கள் மற்றும் புத்திஜீவிகள் அங்கம் வகிக்கின்றனர். இவ்வறிக்கையில் 56 பேர் கையெழுத்திட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் பின்வரும் பிரமுகர்களும் கையொப்பமிட்டுள்ளனர்.

அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ, சிலாபம் ஆயர் அதிவண. பிராங்க் மார்க்கஸ் பெர்னாண்டோ, குருணாகல ஆயர் அதிவண ஆண்ட்றுகுமாரகே, வண பிதா திஸ்ஸ பாலசூரியா, உலக ஒற்றுமை அமைப்பு இணைப்பாளர் வண யோகான் தேவானந்த, டாக்டர் திருமதி ராதிகா குமாரசாமி, ஜனாதிபதி சட்டத்தரணி டெஸ்மண்ட் பெர்னாண்டோ, முன்னாள் ராஜதந்திரி இஸத் ஹுசேன், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் டி. டபிள்யு. அபயகோன், முன்னாள் பிரதி அமைச்சர் ஷெல்டன் ரணராஜா, பேராசிரியர் பண்டியாம்பிள்ளை, பேராசிரியர் ஏ. துரைராஜா (திறந்த பல்கலைக்கழகம், நாவல)

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சூழ்நிலையை உருவாக்கி பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம், ஏனைய அரசியல் கட்சிகள் மற்றும் பொது மக்களைத் தூண்டுவதற்கென ஓர் இயக்கம் ஆரம்பிக்கப்படும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. யுத்தத்தை நிறுத்துவதற்குரிய அரசியல் சூழ்நிலையை உருவாக்குமுகமாக —

முன்னர் சரியான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியவர்கள் இப்பொழுதாவது திருத்தங்களைச் செய்து கொள்ளும்படியும் அனைவரையும் கேட்டுக்கொள்வதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ)

## பாடசாலைகளில்

வல்லை றோமன் கத்தோலிக்க பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டி 4 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ரேவடி விளையாட்டு மைதானத்தில் அதிபர் திரு எஸ் கனகரட்ணம் தலைமையில் நடைபெறும். (க-155)

★ ★ ★

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான மெய்வல்லுநர்ப் போட்டி நாளை 3 ஆம், 4 ஆம் திகதிகளில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும். (க)

## தமிழ், இந்துநாகரிகம் முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். ஆரிய திராவிட பாசாபிவிருத்திச் சங்கம் ஆண்டுதோறும் நடத்தும் தமிழ், இந்துநாகரிகம் ஆகிய பாடங்களுக்கான முன்னோடித் தேர்வுகள் திட்டமிட்டபடி நாளை வெள்ளிக்கிழமையும், மறுநாள் சனிக்கிழமையும் நடைபெறும் என யாழ். வலயம் - 1 கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி அறிவித்துள்ளார்.

நெல்லியடி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடைபெற உள்ள இத்தேர்வுக்கான அனுமதி அட்டைகள் உரிய பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டு விட்டதாகவும் —

மாணவர்கள் தேர்வுக்குத் தேவையான எழுதுகோல்களைத் தம்முடன் கொண்டு செல்லவேண்டும் எனவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-162)

## விளையாட்டு நிகழ்வுகள்

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் உதயன் கிண்ணத்திற்காக கழக மைதானத்தில் நடத்திவரும் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு!

★ 4 00 மணி:- மனோகரா வி. க. எதிர் பருத்தித்துறை ஐ.வி.க.

★ 4.45 மணி;- கண்ணகி வி.க. 'பி' அணி எதிர் சென். அன்ரனீஸ் வி.க. 'ஏ' அணி.

★ ★ ★

யாழ். கல்வி வலயம் - 1 இற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 2 45 மணி முதல் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

வேம்படி மகளிர் கல்லூரியில்

★ 17 வயதுப் பிரிவு:- சுண்டிக்குளி மகளிர் எதிர் புங்குடுதீவு ம.வி. மற்றும் வேலணை துரைசாமி ம. ம. வி. எதிர் யாழ். இந்து மகளிர்.

★ 19 வயதுப் பிரிவு: கொக்குவில் இந்து எதிர் சுண்டிக்குளி மகளிர்.

கைதடி நவீல்ட் பாடசாலையில்

★ 17 வயதுப் பிரிவு:- டிறிபேக் எதிர் கன்னியர்மடம் தமிழ் ம.வி.

★ 19 வயதுப் பிரிவு:- டிறிபேக் எதிர் சனசரத்தினம் ம.ம.வி. மற்றும் சாவகச்சேரி இந்து எதிர் கன்னியர்மடம் தமிழ் ம.வி.

## றுகுணு வந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 2

800 மெற்றிக் தொன் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் 'றுகுணு' நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது.

கப்பலில் எடுத்து வரப்பட்ட உணவுப் பொருள்கள் அதிகமானவை வர்த்தகத் திணைக்களத்துக்கு உரியவை. (ஒ-3-17)

## தொழில் நுட்ப கல்லூரி பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 2

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெற உள்ள தொழில் நுட்பக் கல்லூரி இறுதி ஆண்டுப் பரீட்சைக்கான வினாத்தாள்கள், அனுமதி அட்டைகள், நேர அட்டவணை என்பன நேற்று முன்தினம் விமானமூலம் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளன.

குடிசாரியல், பொறிமுறை எந்திரவியல். மின்சாரமும் இலத்திரனியலும் எந்திரவியலும், கணிய அளவையியல், உயர் தேசிய கணக்கியல் தகுதி தேர்வு புதிய பாடத்திட்டம், பழைய பாடத்திட்டம் ஆகியவற்றிற்கான வினாத்தாள்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக யாழ். தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் தெரிவித்தார். (ஒ-162)

## வீரப்பனை பிடிப்பதற்கு புதிய அமைப்பு!

சென்னை, ஜூன் 2

சந்தனமரக்கடத்தல் காரன் வீரப்பனைப் பிடிப்பதற்கு புதிய அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டிருப்பதாக கர்நாடக அரசு அறிவித்துள்ளது.

புதிய அமைப்பின் விவரங்கள் விரைவில் அறிவிக்கப்படும் என்று கர்நாடக மாநில வனத்துறை அமைச்சர் என். விஸ்வநாதி செய்தியாளர்களிடம் நேற்றுத் தெரிவித்தார். (ஒ-எ)

## கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ்ப்பாணம் கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல் இம்மாதம் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

இதற்கான நியமனப் பத்திரங்கள் சங்கத்தின் 12 கிளைகளில் இம்மாதம் 4 ஆம்திகதி காலை 9 மணி முதல் 10மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். (இ-எ)

அத்தியாவசிய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் திரு. ஆர். பாஸ்கரலிங்கம் வெளிநாடு சென்றதாலேயே இந்தக் குழுவின் கூட்டம் கடந்த இரண்டு மாதங்களாக நடைபெறவில்லை என்று கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்தே வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கான அத்தியாவசிய சேவைகளும், புனர்வாழ்வு நடவடிக்கைகளும் — தடைப்படும் அபாய நிலை உருவாகியுள்ளதாக அவற்றுடன் தொடர்புடைய யாழ். மாவட்ட அதிகாரிகள் அச்சம் தெரிவித்தனர்.

திரு.பாஸ்கரலிங்கம் மேலும் இரண்டு மாத கால மருத்துவ விடுமுறையில் வெளிநாடு சென்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-3)

# தொழிற்சங்கவாதிகள் மற்றும் கோயில் நிர்வாகிகள் வர்த்தகர்கள் கூட்டம்

வலிகாமம் கோட்டத்துக்கு உட்பட்ட அனைத்து வர்த்தகர்களுக்கான கலந்துரையாடலும்—

வலிகாமம் கோட்டத்துக்கு உட்பட்ட அனைத்து கோயில் நிர்வாக சபையினருக்கும் தொழிற்சங்க நிர்வாக உறுப்பினர்களுக்குமான கலந்துரையாடலும்—

எதிர்வரும் 4 ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

அனைத்து வர்த்தகர்களுக்குமான கலந்துரையாடல் அன்று பிற்பகல் 3. 00 மணிக்கு நடைபெறும்

அனைத்து கோயில் நிர்வாக சபையினருக்கும் தொழிற்சங்க நிர்வாக உறுப்பினர்களுக்குமான கலந்துரையாடல் அன்று காலை 9. 00 மணிக்கு நடைபெறும்.

இக் கலந்துரையாடல்களில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கோரியுள்ளார். (இ)

## பிரதேச செயலகங்களில் வேலை வாய்ப்பு தகவல் பிரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். மாவட்டத்தில் 14 உதவி அரச அதிபர் அலுவலகங்களில் — பிரதேச செயலர் அலுவலகங்களில்— வேலை வாய்ப்பு தகவல் பிரிவுகள் அமைக்கப்படவிருக்கின்றன.

இந்த தகவல் பிரிவு குறித்த விபரங்கள் அடங்கிய சுற்றறிக்கைகளை யாழ். மாவட்ட திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் திரு. வி. செ. சுவாமிநாதன் நேற்று பிரதேச செயலர்களுக்கு அனுப்பியுள்ளார்;

பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு பெறுவதற்கு வசதியாக வேலை வாய்ப்பு வர்த்தமானிகளை வழங்கல்—

வேலை தேடுபவர்களுக்கும் அரச, அரச சார்பற்ற ஸ்தாபனங்களுக்கும் இடையில் இணைப்பாளராக செயற்படுதல்—

உற்பத்திக் குழுக்களை அமைத்து வேலை வாய்ப்புக்கான வழிகளை காணல்— போன்றவற்றில் தகவல் பிரிவுகள் பணியாற்றும்.

இந்த பிரிவுகள் நேற்று முதல் செயற்பட ஆரம்பிக்க வேண்டும் என்று உள்நாட்டலுவல்கள் அமைச்சு யாழ். செயலகத்திற்கு அறிவித்துள்ளது. (ஒ-3)

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 2

அளவெட்டிப் பகுதியில் படையினருடன் இடம்பெற்ற திடீர் மோதல் சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான இரண்டாம் லெப்டினன்ட் கைலாஸ் அல்லது மலையரசன் (குமாரசிங்கம் செகிதாதரன் — திருமலை) என்ற போராளி வீரச்சாவடைந்தார். (உ-5)

பிரேமதாஸா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடந்த ஆமர் விதிச்சந்தி கழுவப்பட்டது. இது சந்தேகத்தை எழுப்புவதாகவும் பிரேமா குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

பிரேமாவின் இறுதிச் சடங்கின் போது வாரடிக்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது இந்த சந்தேகத்தை வலுப்பெறச் செய்துள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். (உ-எ-6)

இருநேரப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர் என்றும் —

இக்கூட்டத்தின் மூலம் இருநேரப் பாடசாலைகள் பற்றிய நிலைப்பாடுகள் புரிந்துணர்வின் அடிப்படையில் சீராக்கம் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் அறிவிக்கப்பட்டது. (உ)

அமைச்சரவை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் —

இதனால் தமக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு ஒரு கோடி ரூபாவை நஷ்டஈடாகத் தரவேண்டும் என்று கோரியும்—

திரு. ஹெட்டியாராச்சி முழு அமைச்சரவை உறுப்பினர்களுக்கும் எதிராக இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார். (உ-எ)

## அமைச்சு அலுவலகங்களில் உடைமைகள் உள்ளனவா?

### ஆய்வு நடத்த அரசு உத்தரவு

கொழும்பு, ஜூன் 2

அமைச்சு அலுவலகங்களுக்குச் சொந்தமான உடைமைகள் அந்த அந்த அலுவலகங்களில் உள்ளனவா என்பதைக் கண்டறியும் ஆய்வு ஒன்றை நடத்தும்படி அரசு உத்தரவிட்டுள்ளது.

1989ஆம் ஆண்டில் இருந்து இந்த ஆய்வு நடத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சுகளுக்குச் சொந்தமான தளபாடங்கள் மற்றும் உடைமைகள் அரசியல்வாதிகளின் தனிப்பட்ட பாவனைக்காக அகற்றப்பட்ட சம்பவங்கள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசு இந்த ஆய்வை நடத்துகின்றது.

பட்டலப்பிட்டியில் இருந்த அமைச்சு ஒன்று நகரின் வேறொரு பகுதிக்கு மாற்றப்பட்ட போது அந்த அமைச்சிற்குரிய அசையும் உடைமைகளின் ஒரு பகுதிதான் புதிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்தது என்றும் —

மாநாட்டு மேசை, கதிரைகள், மின் விசிறிகள் முதலியான அரசியல்வாதி ஒருவரின் தனிப்பட்ட வாசஸ்தலத்துக்குக் கொண்டு போகப்பட்டன என்றும் —

விசாரணையில் தெரியவந்துள்ளது. அந்த அரசியல்வாதியின் வீட்டில் காணப்பட்ட பொருள்களில் எல்லாம் அமைச்சின் இலச்சினை இருக்கக் காணப்பட்டதாம். (ஒ-எ)

## 1991ஆம் ஆண்டின் பின்னர்

### புனரமைப்பு நிதி வழங்குவதில் யாழ். மாட்டம் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பிரதேச மற்றும் நகரசபைகளின் புனரமைப்புப் பணிகளுக்கு தேவையான நிதியை அனுப்பி வைப்பதில் வடக்கு-கிழக்கு மாகாண சபை அக்கறை காட்டாது இருந்து வருவதாக கூறப்படுகின்றது.

1991ஆம் ஆண்டின் பின்னர் இதுவரை ஒரு சதமேனும் யாழ் மாவட்ட புனரமைப்பு வேலைத் திட்டத்திற்காக மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு மாகாண சபையால் அனுப்பிவைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்புனரமைப்பு வேலைகளுக்கென 1988 ஆம் ஆண்டில் பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித்துறை நகரசபைகளுக்கு தனா 4½ கோடி ரூபாவும்— சாவகச்சேரி நகரசபைக்கு மூன்றுகோடி ரூபாவும் ஏனைய பிரதேச சபைகளுக்கு மூன்று கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டது எனினும் 1991 ஜூன் வரை இந்த நிதி ஒதுக்கீட்டில் இருந்து பருத்தித்துறை நகரசபைக்கு 8 லட்சம் ரூபாவும் வல்வெட்டித்துறை நகரசபைக்கு 40 லட்சம் ரூபாவும் சாவகச்சேரி நகரசபைக்கு 65 லட்சம் ரூபாவும் ஏனைய பிரதேச சபைகளுக்கு 75 லட்சம் ரூபாவும் மட்டுமே கிடைத்தன.

1993வரை கிளிநொச்சி மாவட்டத்துக்கு இப்புனரமைப்பு நிதி கிடைத்துள்ள போதும்— யாழ். மாவட்டம் புறக்கணிக்கப்பட்ட நிலையில் உள்ளது. இதனைச் சுட்டிக்காட்டி பிரதேச உள்ளூராட்சி ஆணையாளர் திரு. க. டிவ [illegible] மாகாண பிரதம செயலாளர் [illegible] அனுப்பி வைத்திருக்கிறார்.

## கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 2

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை மாணவர்களின் சித்திரக் கண்காட்சி இன்றும் நாளையும் காலை 9-30 மணி முதல் பிற்பகல் 3மணி வரை நடைபெறும்.

நல்லூர்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் [illegible] தானையா பிரதம [illegible] ராகக் கலந்து [illegible] திறந்து வைப்பார். (ஒ)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி பராசக்தி பாலச்சந்திரன்

இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதி கிளை உப முகாமையாளர் திரு. ஜே. பாலச்சந்திரன் அவர்களின் அன்புத் துணைவியார் திருமதி பராசக்தி பாலச்சந்திரன் அவர்களின் பிரிவு கேட்டு வேதனையுறுகின்றோம்.

அன்னாரது பேரிழப்பால் துயரில் தோய்ந்துள்ள அவரது குடும்பத்தவர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் திருமதி பா. பராசக்தி அவர்களின் ஆன்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நோய் நீங்கி வருவாளென்று<br>நோக்கி வழி காத்திருக்க<br>தாய்போன செய்தி கேட்டு<br>தவிப்பவர்க்கு என் சொல்வோம்.

நண்பரது துயரோடு<br>நாம் பங்கு கொள்ளுகின்றோம்<br>அன்பனே உங்களுக்கெம்<br>ஆழ்ந்த அனுதாபம்.

முகாமையாளர்,<br>ஊழியர்கள்.

இலங்கை வங்கி.<br>ஸ்ரான்லி வீதி கிளை. (31210)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அழகக்கோன் பாக்கியம்

திருமதி அழகக்கோன் பாக்கியம் 30-05-94 அன்று பி. ப. 4-00மணியளவில் கொழும்பில் காலமானார். இவர், காலஞ்சென்றவர்களான அழகக்கோனின் அன்பு மனைவியும், அப்புத்துரை தெய்வயானை தம்பதிகளின் அருமைபுத்திரியும், அ. தம்பிஐயாவின் சகோதரியும் ஆவார், அன்னார் கோகிலம், செல்லம்மா, தர்மலிங்கம் (பல.நோக்கு கூட்டுறவுச் சங்கம்), குணவதி, கோபால் (France), ருக்மணி (France), தேவராசா (France), கமலாதேவி, விஜகுமார் (France) ஆகியோரின் அன்புத் தாயாரும், பூபாலசிங்கம், தம்பு. இரத்தின பவானி சோமசுந்தரம், தனலட்சுமி (France), குணரத்தினம் France), வசந்தா (France), சோமலிங்கம் (வர்த்தகத் திணைக்களம்-யாழ்ப்பாணம்), பிரேமளா (France) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:<br>தர்மலிங்கம்.<br>(மகன்)

நடுத்தெரு லேன்,<br>கண்டி வீதி, அரியாலை. (31200)

### திருமதி பராசக்தி பாலச்சந்திரன்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பழம் றோட்டை வசிப்பிடமாகவும் கொண்டவருமாகிய திருமதி பராசக்தி பாலச்சந்திரன் 01-06-1994 புதன் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் புங்குடுதீவு தம்பிமுத்து குழந்தைவேலு, கனகம்மாவின் அன்பு மகளும் வியன்காமம் கதிரேசு வேலுப்பிள்ளை பவளரத்தினம் ஆகியோரின் மருமகளும் பாலச்சந்திரனின் (இலங்கை வங்கி 2 ஆம் கிளை யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும், கஜேந்திரா (மாணவன் சென் ஜோன்ஸ் கல்லூரி), பிரவீணா, சகிதா, சர்மிளா (மாணவிகள் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், S.T K. மகாலிங்கம் (இந்தியா), இராமச்சந்திரன் (கோண்டாவில் செரமிக் யாழ்ப்பாணம்), மகேந்திரன் (கனடா), திருமதி மகாலெட்சுமி வடிவேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் தேவி, ஜெகதீஸ்வரி, லலிதா, வடிவேலுப்பிள்ளை (கொழும்பு) பாலகிருஷ்ணன் (கல்வித்திணைக்களம் யாழ்ப்பாணம்), சாந்தகௌரி யோகரத்தினம் (U K ), சாரதா பாலேந்திரன் (U.K ), கௌரீஸ்வரி விமலேஸ்வரன் (வவுனியா), சிறி பாலகுமார் (U.K ), அகிலகௌரி முரளீதரன் (U.K ), ஜெயகௌரி சிவகுமார் (U.K.) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:<br>கு இராமச்சந்திரன்

48/1, பழம் றோட்,<br>கந்தர்மடம்,<br>யாழ்ப்பாணம். (31212)

## மரண அறிவித்தல்கள்

### ஆசீர்வாதம் மேரியோசப்பின்

சிலாலையைச் சேர்ந்த திருமதி ஆசீர்வாதம் மேரியோசப்பின் (சின்னம்மா) நேற்று (01-06-94) காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற ஆசீர்வாதத்தின் அன்பு மனைவியும், இம்மனுவேல் (பிரான்ஸ்), மேரி றெஜினா (இந்தியா), யேசுதாசன் (கொழும்பு றொபேட் ஏஜென்ஸி), மேரிதிரேசா, மோசேஸ் (திருச்செல்வம்), யுஸ்ரின் ஜெயம் (இத்தாலி), அகஸ்ரா மேரிபுஸ்பம் ஆகியோரின் அன்புத் தாயாரும், யூலியானா (பிரான்ஸ்), லூர்து நாயகி (இளைப்பாறிய ஆசிரியை, செல். தோமஸ் — மாதகல்), யேசுதாசன் (இந்தியா), காலஞ்சென்ற மருசலீன் (மாட்டினஸ்), எ. லேட் (இத்தாலி), ராஜகுமாரி, அன்ரன் ஜீவா ஆகியோரின் மாமியாரும், கலா, சுரேஸ், சதீஸ் வனஜா, கிரிஜா, ஜெயந்தி, றோணி, கனியூட், றாஜினி, சுபோ, சுதா, றெனி, றெனிலா, பெறி, ஜெசிக்கா, ஜிவ்றி, நந்தா, பிரியா, துஷி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று பி.ப 3 மணியளவில் சிலாலை சேமக்காலையில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்;-<br>மோசேஸ் (திருச்செல்வம்)<br>(மகன்)

மாதா கோவிலடி,<br>உயரப்புலம்,<br>ஆனைக்கோட்டை. (31213)

### திருமதி சிவஞானமணி இரத்தினசபாபதி

உரும்பராயைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிவிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானமணி இரத்தினசபாபதி நேற்று மாலை (01 - 06 - 94) காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற அம்பலவாணர் இரத்தினசபாபதி (புகையிரத நிலைய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், உரும்பராயைச் சேர்ந்த காலஞ்சென்ற அரியரத்தினம் — ஆசைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் திருநெல்வேலி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற அம்பலவாணர் — செல்லம்மா தம்பதிகளின் மருமகளும் நித்தியகலா, வைத்திய கலாநிதி சசிகலா (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நா. குணபாலன் (இலங்கை வங்கி, யாழ். பிரதான கிளை) அவர்களின் அன்பு மாமியாரும், வைஷ்ணவி, வத்சன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும். நாவலர் வீதியைச் சேர்ந்த தற்பரநாதன் அவர்களின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று பிற்பகல் 4 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்<br>குடும்பத்தினர்

அம்பலவாணர் பாதை,<br>திருநெல்வேலி தெற்கு. (31214)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 02-06-1994 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org